**தலைப்பு 418 – சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட இந்த அறிக்கையின் 1.6.1(இ) மற்றும் 1.6.2 என்ற பந்திகளில் காண்பிக்கப்படுகின்ற அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பௌதீக சொத்துக்கள் கைப்பற்றல்களின் பெறுமதி ACA-6 இல் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் ரூபா 6,603,739 ஆக இருந்த போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் பௌதீக சொத்துக்கள் கைப்பற்றல்களின் பெறுமதியில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் கொண்டு வரப்படுகின்ற | படிவ இலக்கம் ஏ.சீ.ஏ.2(ii) இல் அரசாங்க முதலீடுகளின் மொத்த செலவினமாக காண்பிக்கப்பட்ட ரூபா 320,757,336 பெறுமதி காசுப் பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்களின் சேமிப்பு அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீட்டு கைப்பற்றல்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

செலவினங்கள் சேர்க்கப்பட்டு ரூபா 320,757,336 ஆக காண்பிக்கப்பட்டமையால் முதலீட்டு செயற்பாடுகளுக்கான காசு செலவிடல் ரூபா 314,153,597 இனால் அதிகரித்தும், செயற்பாட்டு செலவினங்களுக்கான காசு செலவிடலின் பெறுமதி ரூபா 314,153,597 இனால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) புனர்வாழ்வழிப்பு ஆணையாளர் நாயக பணியகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,706,999 ஆன டயர்களின் பெறுமதி நிதியல்லா சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டமையால் நிதியல்லா சொத்துக்கள் ரூபா 4,706,999 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதியல்லா சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 4,706,999 ஆன டயர்களின் பெறுமதி அதிலிருந்து அகற்றப்பட்டு நிதியல்லா சொத்துக்களின் பெறுமதியை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதியல்லா சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயக பணியகத்தில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 246,200,000 ஆன கட்டிட நிர்மாணங்கள் மூலதனமாக்கப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிர்மாணங்களுக்குரிய சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் சரியான பிரகாரம் கணக்கீட்டு முறைமையில் உள்ளடக்கி கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள போதிலும் மூலதனமாக்கப்படாதிருந்ததுடன் விரைவாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயக பணியகம் அமைந்துள்ள கட்டிடத்திற்காக வாடகை முற்பணமாக ரூபா 7,690,560 தொகையும், வேலை முற்பணமாக ரூபா 19,327,232 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், இந்த வாடகை மற்றும் வேலை முற்பணம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படாமையின் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் நிதிச் சொத்துக்களின் கீழ் வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கிலும் ஒதுக்கக் கணக்கிலும் ரூபா 27,017,792 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இதன் பின்னர் இவ்வாறான கொடுப்பனவுகளை செய்யும் போது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய முறை தொடர்பாக பணியகத்தின் உத்தியோகத்தர்களுக்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதி ரூபா 287,982,491 ஆன நிதியல்லா சொத்துக்கள் பௌதீக ரீதியில் பரீட்சித்து உறுதிப்படுத்தல் பெற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளை பூர்த்திசெய்தவுடன் நிதியல்லா சொத்துக்களுக்காக மேற்கொள்ள வேண்டிய சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

### 1.6.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு | மாதாந்தம் இந்த அமைச்சிற்கு இணைந்ததாகவுள்ள நிறுவனங்களின் செயல் முன்னேற்றம் மீளாய்வு | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செய்யப்படுகின்றது. அதன் போது நிதிசார் செயல்முன்னேற்றம், பெறுகை செயற்பாடுகளின் செயல் முன்னேற்றம், அபிவிருத்தி செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றம் மற்றும் பொதுவாக நிறுவனங்களின் உள்ளக கட்டுப்பாடு பிரச்சினைகள் என்பன கலந்துரையாடப்பட்டிருந்தது. | வேண்டும். |
| (ஆ) | உள்ளக கணக்காய்வு இலக்குகளை சரியான பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான திட்ட முறைமையொன்று உள்ளமைக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதும் அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.4. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 1641 மற்றும் 1642 | மீளாய்வாண்டின் போது இலக்கம் KQ-5420 என்ற வாகனம் ரூபா 51,000 செலவில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02(i) பந்தி | பதிவு உரித்து இன்றிய பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள் பதிவு செய்த நிறுவனத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் கலைக்கப்பட்டுள்ள அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட 15 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதிவினை மாற்றிக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 04 ஆந் திகதிய 07/2019 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | உரியவாறு செலவினக் கட்டுப்பாட்டு குறிகாட்டிகளை ஈடுபடுத்தி அந்த குறிகாட்டிகளின் மூலம் செலவினங்கள் கட்டுப்படுத்தப்படுகின்ற மையை உறுதிப்படுத்துதல் பிரதான கணக்கீட்டு | புதிய நிலையங்களை ஆரம்பிப்பதற்குரிய கட்டிடங்களை கையேற்கும் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படும் வரை உரிய நிலையங்களை கையேற்றதன் பின்னர் | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாக இருந்தமை கூறப்பட்டிருக்கும் போது புனர்வாழ்வு நிலையங்களை ஆரம்பிக்க முடியுமான காலஎல்லை குறித்துரைத்த ரீதியில் இனங்காண முடியாத நிலைமையில் மீளாய்வாண்டில் ரூபா 61,801,989 பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | விரைவாக புனர்வாழ்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குரிய அடிப்படைத் தேவைகள் பெறுகைத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கையேற்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் விரைவாக புனர்வாழ்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் தயார்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2021 ஏப்ரல் 09 ஆந் திகதிய CGIR/2021/02-02 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கடிதத்தின் கடிதம் மற்றும் 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் வழிகாட்டி | மீளாய்வாண்டில் வெளித் தரப்பினரிடமிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யும் போது செலுத்தப்பட்டுள்ள ரூபா 162,898 பெறுமதிசேர் வரி தொகை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் பிரகாரம் காலாண்டு முடிவடைந்து அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தவறினால் அறிக்கையிடுவதற்கு தவறியிருந்த திருத்தப்பட்ட அறிக்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் I ஆம் பகுதியின் 13.2 ஆம் பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 770(4)(அ) | புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயக பணியகத்திற்குரிய விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய 03 வாகனங்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு மீண்டெழும் செலவின விடயம் மற்றும் 03 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,000,000 மொத்த தேறிய நிதியேற்பாடும் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | 2021.08.31 ஆந் திகதிய 21/1596/304/134 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சேமிக்கப்பட்டதன் காரணமாகவும், முழு நேர அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படாமையின் அடிப்படையில் செலவினங்களின் தேவை வரையறுக்கப்பட்டதன் காரணமாகவும் மொத்த தேறிய நிதியேற்பாடும் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதியேற்பாடு குறித்துரைத்த பிரகாரம் திட்டமிட்டு மதிப்பீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 07 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 03 மூலதன செலவின விடயங்களுக்குரியதாக 50 சதத்தை விட அதிகரித்த சேமிப்புக்கள் காணக்கூடியதாக இருந்தது. மேலும் 04 செலவின விடயங்களுக்கு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றல்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரும் 66 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 2021.08.31 ஆந் திகதிய 21/1596/304/134 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் முழுமையான காலமும் அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படாமையின் அடிப்படையில் செலவினங்கள் வரையறுக்கப்பட்டமை, சிக்கனமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததன் காரணமாக சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் கந்தக்காடு புனர்வாழ்வளிப்பு நிலையம் சுகாதார அமைச்சின் கீழ் கொவிட் வைத்தியசாலையாக நியமிக்கப்பட்டமையின் காரணமாக அதில் திட்டமிடப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாமையால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயக பணியகத்திற்குரிய 02 செலவின விடயங்களுக் குரிய ரூபா 4,569,561 பெறுமதியுடைய பொறுப்புக்கள் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பணியகத்தின் திசெம்பர் மாதத்திற்குரிய மேலதிக நேரப் படி, பராமரிப்பு மற்றும் எரிபொருள் பற்றுச்சீட்டுக்கள் (இராணுவ தளபதி), வீட்டு வாடகைப் பட்டியல் மற்றும் வாகன பட்டியல்கள் அடுத்துவரும் ஆண்டின் சனவரி அல்லது பெப்ரவரி மாதங்களின் போது வழங்கப்படுகின்றமையால் ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது. | பொறுப்புக்களின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயக பணியகத்தால் கட்டிட நிர்மாணத்திற்காக வெளித்தரப்பினருக்கு உள்ள கடப்பாடுகளின் பெறுமதியான ரூபா 346,210,705 தொகை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வகையில் கடப்பாடுகளை கணக்கீடு செய்ய வேண்டிய முறை தொடர்பாக உரிய நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

### 2.3 முற்பணம் வழங்குதலும் தீர்த்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வேலை நீக்கத்திற்கு உட்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 229,320 தொகையான இடர் கடன் மீதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும், மரணமடைந்த ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 10,000 இடர் கடன் மீதி 02 வருடங்களுக்கு மேற்பட்ட | வேலை நீக்கத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்தும், பதவியை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்தும் அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய இடர் கடன் மற்றும் விழா முற்பணம் என்பவற்றை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மரணமடைந்த உத்தியோகத்தரின் கடன் பணம் | குறித்துரைத்த கால எல்லையில் கடன் மீதி அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காலத்திலிருந்தும் காணப்படுகின்ற போதும், அந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த ஆண்டின் போது தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சினால் மூலதன சொத்துக்களை கைப்பற்றுவதற்கு ரூபா 9.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4.3(அ) இன் பிரகாரம் அறிவித்தல் பிரசுரித்தல் பொருளாதார ரீதியில் பாதகமான குறைந்த பெறுமதியுடைய விடயங்களின் பெறுகைகளுக்காக அல்லது தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்ற விடயங்களை கொள்வனவு செய்வதற்காக வழங்குனர்கள் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டிற்காக வழங்குனர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவுகள் மற்றும் ஏனைய பெறுகை நடவடிக்கைகளுக்காக இராஜாங்க அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு வரையறுக்கப்பட்ட அளவாக இருந்தமையால் வழங்குனர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் தொலைபேசி பெயர்வழிக்கோவையின் வானவில் வர்ணப் பக்கங்களில் பதிவு செய்துள்ள வழங்குனர்களின் பட்டியலில் இருந்து கூறுவிலைகளை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) குறித்த மாதிரிகள் வழங்குனர்களுக்கு சமர்ப்பிக்காமையின் காரணமாக ரூபா 1,227,889 பெறுமதியான தரையை மூடுதல் மற்றும் Work Station பொருத்தும் பணிகளின் போது ஆகக்குறைந்த விலைகளை மாத்திரம் கவனத்தில் கொண்டு வழங்குனர்களை தெரிவு செய்வதற்காக பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டதில் 2006 | எதிர்காலத்தில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஆலோசனைகளுக்கு இணங்க மாதிரிகளை தயாரித்து பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1(ஊ) இன் பிரகாரம் மதிப்பீடு மற்றும் தெரிவு செய்தல் பணி நடைமுறையில் வெளிப்படை மற்றும் உண்மைத்தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | | |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 யூலை 01 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்த PH-1288 ஆம் இலக்க கெப் வண்டியை பழுதுபார்க்கும் செலவினம் ரூபா 2,290,015 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,698,894 தொகை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து கிடைத்திருந்ததுடன் மிகுதித் தொகையான ரூபா 591,120 மீளாய்வாண்டில் அமைச்சின் செலிவனப் பொறுப்பாக இருந்தமையால் அந்த நட்டம் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் போது முன்னாள் இருந்த தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சிற்கு உரியதாக காணப்பட்ட PH-1288 என்ற கெப் வண்டிக்கு ஏற்பட்ட நட்டமாகும். | அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 03 வாகனங்கள் தொடர்பான பழுதுபார்த்தல்கள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்டமைக்கு எந்திரவியல் பொறியியலாளரால் பரிந்துரை செய்யப்படாதிருக்கும் போது 2021 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1,394,835 பெறுமதியான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வாகனம் பழுதுபார்த்து பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும், எந்திரவியல் பொறியியலாளரின் பரிந்துரையை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | எந்திரவியல் பொறியியலாளரால் பரிந்துரை செய்யப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயக பணியகம் அமைந்துள்ள கட்டிடத்தின் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கும், கட்டிட உரிமையாளருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும் முன்னர் உரிய நிறுவனத்துடன் ரூபா 8,380,420 தொகையில் கட்டிடத்தில் அலுவலகத்தை பகுதிகளாக பிரிக்கும் பணிக்காக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. மேலும் மாதாந்த வாடகைப் பெறுமதி ரூபா 2,400,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த அந்த கட்டிடத்திற்காக அந்த மதிப்பீட்டு பெறுமதியை விட ரூபா 163,520 இனால் மேலதிக வாடகைப் பெறுமதியில் உடன்படிக்கை செய்யப்பட்டமையின் காரணமாக 02 வருட காலத்திற்காக ரூபா 3,924,480 வாடகைப் பணம் மேலதிகமாக செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது. | மதிப்பீட்டுத் தொகைக்காக கட்டிட உரிமையாளருடன் இணங்காமையாலும், வேறு கட்டிடமொன்று பத்தரமுல்ல பிரதேசத்தில் கண்டறிவதற்கு முடியாதிருந்தமையினாலும் ரூபா 2,563,520 மாதாந்த வாடகையில் கட்டிடத்தை பெற்றுக் கொள்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் தேவையின் பிரகாரம் ஆகக்கூடிய அளவில் கட்டிடம் பயன்படுத்தப்படுகின்றது. | மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொண்டதன் பின்னர் உடன்படிக்கை களில் கைச்சாத்திடல் வேண்டும். |
| (இ) | பணியகத்தால் கட்டிடத்தின் தேவை 15000 சதுரஅடி முதல் 16000 ஆக அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் போது 14,524 சதுரஅடி பெறுகைகள் குழு ஆணைக்குழு அலுவலகம் அமைந்துள்ள கட்டிடம் ரூபா 2,454,556 மாதாந்த வாடகைத் தொகையில் கொள்வனவு செய்வதற்கு முடியுமாக இருக்கும் போது 19,858 சதுரஅடி கட்டிடமொன்று ரூபா 2,563,520 தொகையில் வாடகைக்கு எடுக்கப்பட்டமையால் மாதாந்தம் ரூபா 108,964 வீதம் மேலதிகமாக செலுத்துவதற்கு | பெறுகைகள் ஆணைக்குழு அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தின் உரிமையாளரால் ஒரு சதுரஅடி ரூபா 169 வீதம் 14524 சதுர அடிக்காக ரூபா 2,454,556 மாதாந்த வாடகையில் வழங்குவதற்கு முடியுமாக இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீண்டும் கடிதமொன்றை அனுப்பி 12599 சதுரஅடி அந்த விலையிலும், மிகுதி 1925 சதுரஅடி அளவு மதிப்பீடு செய்யப்பட்ட அந்த தொகையிலும் அதன் பின்னர் வழங்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. | அரச செலவினங்களை சரியான பிரகாரம் முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பட்டமையும், அதற்கு மேலதிகமாக நிலையான சொத்துக்கள், கணனி வலையமைப்பு மற்றும் பகுதிகளாக பிரிப்பதுடன் அந்தக் கட்டிடம் பெறப்பட்டதால் பெற்றுக் கொள்வதற்கு இருந்த பொருளாதார நலன்கள் உரித்தற்று போயிருந்தது. அதன் காரணமாக அமைச்சினால் குறித்துரைத்த காலப் பகுதியில் சரியான தீர்மானம் எடுக்காமையால் 02 வருடங்களுக்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட வாடகைப் பணமாக ரூபா 2,615,136 மற்றும் அறைகளை பிரித்தல் மற்றும் கணனி வலையமைப்பிற்காக ரூபா 10,642,740 என மேலதிக கிரயமொன்றை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2017 நவம்பர் 22 ஆந் திகதிய அமப/17/2509/745/016 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயக பணியகத்தின் சட்டவரைவு தயாரிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் பணியகத்திற்கு 2021 ஏப்ரல் 28 ஆந் திகதிய அமப/21/0564/330/029 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் சட்ட வரைவிற்காக சட்டமா அதிபரின் விடுவிப்புடன் அமைச்சரவைக்கு மீண்டும் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சட்ட வரைவிற்குரிய நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை | தற்போது உரிய வரைவு சட்டவரைவு வழங்கலினால் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்படுவதுடன் இந்த நடவடிக்கைகள் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் அலுவலகத்தின் மூலம் இணைக்கப்படுகின்றது. | புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயக பணியகத்தின் சட்டவரைவை தயாரித்தல் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40(1) ஆம் பிரிவு மற்றும் 40(2)(1) ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவை தாபிப்பதற்காக பதவியணியினரின் தேவைகளை காண்பித்து அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பிரதான உள்ளக கணக்காய்வாளரை உள்ளடக்கிய பதவியணியினரை வழங்கியவுடன் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் வேலைகளை ஆரம்பிக்க முடியுமென அறியத்தருகின்றோம். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 சனவரி 12 ஆந் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கையின் 5.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக்குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை வருடத்திற்கு 04 தடவைகள் படி கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் ஒரு கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டமையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்த முடியாமல் இருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 150 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான பதவியணியினர் | அமைச்சின் பதவியணியினரில் இரண்டாம் நிலையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 58 (அபிவிருத்தி உத்தியோகத்தர் | பதவியணியினரின் தேவையை சரியாக எதிர்வு கூறுவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| 62 மாத்திரமாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ஆளணி சம்பளங்களுக்காக ரூபா 45,436,136 செலவிடப்பட்டிருந்தது. | பதவிகள்), முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2021.12.31 ஆந் திகதிய DMS/1148-ii ஆம் இலக்க கடிதம் மூலம் நிறுத்தப்பட்டிருந்தது. | எடுத்தல் வேண்டும். |